24th January 1961]

Lemuria

* 131. *Q*—.SRI V. K. KRISHNAMURTHY (on behalf of SRI N. R. THIAGARAJAN) : *கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

(அ) நமது பழம்பெரும் தமிழகமான கடல்கொண்ட லெமுரியா கண்டம் பற்றி சர்க்கார் ஆராய்ந்ததா ?

(இ) அதுபற்றி விரிவான அறிக்கை சட்டசபை நூல் நிலையத்தில் வைக்கப்படுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (அ) No, Sir.

(இ) Does not arise.

SRI A. VEDARATHNAM : *லெமுரியா என்ற இடம் இருந்தது என்று நமக்கு எந்த ஆதாரத்தைக் கொண்டு தெரிகிறது ? அதிலிருந்து ஏதாவது சரித்திர உண்மைகள் தெரிகிறதா?*

THE HON. SRI C. SUBRAMANIAM : *இது ஒரு யூகம்தான். லெமுரியா கண்டம் என்று ஒன்று இருந்திருக்கவேண்டும் என்று பல நூல்களில் சொல்லப்பட்டிருக்கிறது. அது உண்மையாகவே இருந்தது என்பதற்கு புள்ளி விவரங்கள் இல்லை. இதைப்பற்றி ஆராய்வதைவிட இனிமேல் வருவதைப்பற்றி ஆராய்ச்சி செய்வது நன்றாக இருக்கும் என்பது என் அபிப்பிராயம்.*

Hindi shorthand

*** 132 *Q.*—SRI A. VEDARATHNAM** : *கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

(அ) 1960-ல் நம் மாநிலத்தில் ஹிந்தி சுருக்கெழுத்துப் பயிற்சி, தட்டெழுத்து (டைப்) பயிற்சி எங்கே நடைபெறுகின்றன ?

(இ) இப்பயிற்சி எத்தனை பேருக்கு எவ்வளவு காலத்திற்கு நடக்கும் ?

(உ) இதற்காகும் செலவென்ன ?

(எ) இதற்கு மத்திய அரசாங்க உதவி உண்டா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (அ) Examinations in Shorthand and Typewriting in Hindi are not conducted by this Government. The Government have no information whether any unapproved private institution is giving coaching in this subject.

(இ) *to* (எ) Do not arise.

SRI A. VEDARATHNAM : *நம்முடைய தமிழ் நாட்டிலுள்ள சுருக்கெழுத்தாளர்கள்தான் அகில இந்தியாவிலும் நல்ல திறமையாக இருந்து வருகிறார்கள். நம் நாட்டிலுள்ள சுருக்கெழுத்தாளர்களுக்கு அகில இந்தியாவில் கிராக்கி அதிகமாக இருக்கிறது.*

ஆகவே இவர்கள் இந்தியிலும் சுருக்கெழுத்து தேர்ச்சி பெற்றிருந்தால் இந்தியாவில் எந்த இடங்களிலும் போய் வேலை பார்க்கலாம். இதனால் வேலையில்லாத்திண்டாட்டப் பிரச்னையும் ஓரளவுக்கு தீரும். இம்மாதிரி ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கக்கூடிய வகையில் இந்தி சுருக்கெழுத்து பயிற்சி அளிக்க சர்க்கார் முன் வருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதற்காக பயிற்சி பெற வேண்டும் என்று யாராவது முன்வருவார்கள் என்றால் அதைப் பற்றி சர்க்கார் ஆலோசிக்கும். இப்போது இம்மாதிரிப்பட்ட பயிற்சிக்கு தேவையிருப்பதாக தெரியவில்லை.

SRI A. VEDARATHNAM : இந்தி சுருக்கெழுத்துக்கு பயிற்சி அளிக்க தனியார் பள்ளிகள் முன் வந்தால் அரசாங்கம் அதற்கு ஏதாவது உதவி அளிக்க முன் வருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதைப்பற்றி பரிசிலனை செய்வது, எப்போது இந்தப் பிரச்னை வருமோ அப்போது நான் பரிசிலனை செய்ய முடியும். இப்போது ஹைபாத்தட்டிகலாக கேட்கப்படும் கேள்விக்கு பதில் சொல்வதற்கில்லை.

Counterfeit Currency Notes

* 133 *Q*.—SRI A. VEDARATHNAM : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நாகர்கோவிலில் இரண்டு ரூபாய் கள்ள நோட்டு அச்சடிக்கப்பட்டவர்கள் கண்டு பிடிக்கப்பட்டார்களா ?

(இ) அவர்களிடமிருந்து கிடைத்த தடையங்கள் என்ன ?

(உ) இதன் பேரில் எடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கை என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (அ) Yes, Sir. The gang responsible for the attempt to forge two-rupee currency notes was unearthed and so far seven accused persons have been arrested.

(இ) Nine blocks three incomplete two-rupee conterfeit notes and the treadle machine with its dismantled parts were seized.

(உ) The case is pending trial.

MR. SPEAKER : If it is pending trial is it not *sub judice?* No further question can be asked.

THE HON. the Minister for Industries has come. We shall take up Question No. 125.

TRUTH ALONE TRIUMPHS